# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஆகஸ்ட் 24, 2019

Weekly E-paper • AUGUST 24, 2019


# தமிழகமே வழி நடத்து!

• சுப. வீரபாண்டியன்




## ஓ ஹாங்காங்!

இக்லாஸ் உசேன்

## ப.சிதம்பரம்?

தலையங்கம்

## பார்ப்பனியம் பொருளாதாரம்

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஆகஸ்ட் 24, 2019 Weekly E-paper ● AUGUST 24, 2019

# தமிழகமே வழி நடத்து!

● சுப. வீரபாண்டியன்



மத்தியில் ஆளும் கட்சியான பாஜகவிடமிருந்தும், பாஜகவை ஆளும் ஆர்எஸ்எஸ் தலைவரிடமிருந்தும் இந்த ஒரே வாரத்தில் இரண்டு செய்திகள் வந்துள்ளன.

கடந்த 18 ஆம் தேதி, ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத், புதுதில்லியில் நடைபெற்ற 'ஞான உத்சவ்' நிகழ்ச்சியில் நிறைவுரையாற்றும்போது, சமூக நீதியைச் சாய்த்துவிடும் நோக்கில் ஒரு கருத்தைச் சொல்லியுள்ளார்.

"தாழ்த்தப்பட்ட பழங்குடிகள் பிற்படுத்தப்பட்டோர், ஆகியவர்களுக்குத் தற்போது இந்திய அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள உரிமைப்படி, வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டை நீக்கிவிட, இடஒதுக்கீடு வேண்டும் என்பவர்களும், வேண்டாம், கூடாது என்பவர்களும் சுமுகமான சூழ்நிலையில் அமர்ந்து விவாதித்து அதுபற்றி ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும்."

என்கிறார் மோகன் பகவத். உள்நோக்கம் தெளிவாகப் புரிகிறது. இடஒதுக்கீடு வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்துப் பேச அவர் எல்லோரையும் அழைக்கவில்லை. அதனை நீக்கிட என்ன வழி என்று ஆராய்வதற்கு மட்டுமே அழைப்பு விடுக்கிறார்.

இன்று மோகன் பகவத் பேசியுள்ளதை, நாளை மோடி பேசுவார். ஆகமொத்தம், இடஒதுக்கீட்டை நீக்குவதே அவர்களின் அடுத்த திட்டம் என்பது புரிகிறது. அதனையும் செய்துவிட்டால், அவர்களின் நிகழ்ச்சி நிரல் பெருமளவிற்கு நிறைவு பெற்றுவிடும்.




ஏற்கனவே இடஒதுக்கீட்டு உரிமையை (சலுகை அன்று) இழந்து கொண்டுள்ளோம். அரசுப் பணிகளில் மட்டுமே இடஒதுக்கீடு உள்ளது. அது மொத்தமுள்ள வேலைவாய்ப்பில் 15 விழுக்காட்டிற்கும் குறைவே. மீதமுள்ள 85% வேலைவாய்ப்புகள் தனியார் வசமே உள்ளன. அங்கு இடஒதுக்கீடு இல்லை. அரசுப் பணிகளிலும், மாதம் 65000 ரூபாய் ஊதியம் பெறும் 'ஏழைகளுக்கு' 10% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு விட்டது. கொஞ்ச நஞ்சம் இருக்கின்ற இடஒதுக்கீட்டையும் முற்றிலுமாக ஒழித்துவிட்டால், வெறும் 3 விழுக்காடு மட்டுமே உள்ள அவர்கள், 90% விழுக்காடு அரசு வேலைகளைக் கைப்பற்றிக் கொள்வார்கள். ஏவல் வேலை, துப்புரவுப் பணி போன்ற 10% விழுக்காடு வேலைகள் நமக்குத்தான், அவர்கள் அதில் நம்முடன் போட்டிக்கு வரமாட்டார்கள்.

இது ஒருபுறமிருக்க, நேற்று (23.08.19) மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடு கடுமையான நிதி நெருக்கடியில் இருப்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். வேலையில்லாத் திண்டாட்டம் என்றுமில்லாத அளவுக்குக் கூடி வருவதையும், வேறு வழியின்றி ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆம், கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத பொருளாதார நெருக்கடியை, நாடு இன்று சந்தித்து வருகின்றது. அதே போல லட்சக்கணக்கான ஊழியர்கள் தங்கள் வேலைகளை இழக்கக்கூடிய நிலையும் கண்கூடாகத் தெரிகிறது.

எல்லாவற்றிற்கும் முந்தைய காங்கிரஸ் ஆட்சிதான் காரணம் என்கின்றனர். அப்படியானால், கடந்த 5 ஆண்டுகளில் பாஜக அரசு என்னதான் செய்தது? மோடி ஆட்சி கொண்டுவந்த பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி போன்றவைகளே இன்றைய நிலைக்குக் காரணம் என்கின்றனர் பொருளியல் வல்லுநர்கள்.

செய்ய வேண்டியவைகளைச் செய்யாமலும்,செய்ய வேண்டாத மதவெறிச் செயல்களைச் செய்தும், நாட்டை அழிவுப்பாதைக்கு அழைத்துச் சென்று கொண்டுள்ளது இன்றைய மத்திய அரசு.

வழக்கம்போல் இந்தியாவை வழிநடத்த வேண்டும் தமிழகம்!

●

# ஓ ஹாங்காங்!

● இக்லாஸ் உசேன்

நீங்கள் வல்லரசாக இருக்கலாம். ஆனால் ஒரு நல்லரசாக இருக்க, நாட்டு மக்கள் உணரத்தக்க வகையில் ஒவ்வொரு அடியையும் அளந்து எடுத்து வையுங்கள்.

"ஆணவமும் அதிகாரமும் உங்களையே சுட்டுச் சாம்பலாக்கி விடும்"

என்று ஒரு பேரரசுக்கு எதிராக வெகுமக்கள் கொதித்தெழுந்தது, காஷ்மீரில் அல்ல, ஹாங்காங்கில் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆம், சீனாவின் ஆளுகையில் சுயாட்சி அதிகாரத்தோடு இருவாரங்களுக்கு முன் பிரிக்கப்படாத ஜம்மு காஷ்மீரைப் போலவே ஹாங்காங்குக்கு எனத் தனிச்சட்டம் ,

தனிஆட்சி அடையாளத்தோடு மட்டும் இல்லாமல், தனி நாணயமும் என்று ஹாங்காங் சீனாவில் ஆளுகைக்குட்பட்டு தனிநாடாகவே இருந்து வருகிறது.

காஷ்மீரை இந்தியாவிடம் ஒப்படைத்த ஹரிசிங் மன்னன் போல்,

பிரிட்டன், சீனா இருநாடுகளும் மூன்றாண்டு பேச்சுவார்த்தையில் 1984இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தால், பிரிட்டன், ஹாங்காங்கை 99ஆண்டுகாலம் குத்தகை அடிப்படையில் ஆட்சி செய்து 1997இல் சீனாவிடம் ஒப்படைத்தது. சீனா சட்டதிட்டம் ஏதும் இல்லாமல் பிரிட்டன் சட்டத்தோடு அரை நூற்றாண்டு காலம் சுயாட்சியோடு இருக்கவும் , 2047இல் சீனத்தின் சட்டத்தோடு இணையவும் அந்த ஒப்பந்தத்தில் முடிவாயிற்று.

ஹாங்காங்வாசிகள், 80விழுக்காட்டினர்க்கு மேல் சீனர்கள் என்றாலும், தங்களைச் சீனர்கள் என அழைத்துக்கொள்ளாமல், ஹாங்காங்கியர் என்றே அழைத்துகொள்கிற உளவியல் உருவாக்கம் பெற்ற தனித் தேசிய இனத்தவர்கள்.

அறிஞர் அண்ணாவின் மாபெரும் லட்சியமான, மாநில சுயாட்சி போல் சீனாவின் ஆளுகையில் மாநில சுயாட்சியாக ஹாங்காங் 22ஆண்டு காலம் இருந்து வருகிறது.

இந்நிலையில்தான் இந்தியப் பேரரசு காஷ்மீர் 370சட்டப்பிரிவைச் சிதைத்தது போலவும், அதை எதிர்த்துப் போராடும் காஷ்மீரிகளை எவ்வித விசாரணையும் இன்றிக் கைது செய்வது போலவும், சீனா ஹாங்காங் குற்றவியல் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர முயன்றது..

நம் நாட்டின் தேசியப் புலனாய்வு முகமைச் சட்டத்திருத்தம், கொண்டுவரப்பட்ட ஜூலை 15, 2019க்கு ஒரு மாதத்திற்கு முன்பு, ஹாங்காங்கில் குற்றவாளி அல்லது குற்றவாளி எனச் சந்தேகிக்கும் நபரை நாடு கடத்த, அதாவது சீனாவுக்குக் கொண்டுபோய் விசாரணை நடத்த, சட்டத்திருத்தம் ஹாங்காங் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

தன் நாட்டுக் குற்றவாளி அல்லது குற்றஞ்சாட்டப்பட்டோரை நாடு கடத்த அனுமதிப்பது, தன் நாட்டின் சுதந்திரத்திற்கே ஆபத்தானது. அத்தோடு ஹாங்காங்கியர்களை, யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து நாடுகடத்த இச்சட்டம் வழிவகுக்கும் என்பதால், "ஒட்டுமொத்த நாட்டுச் சுதந்திரத்துக்கு எதிரானது இச்சட்டம்" எனக் கொந்தளித்த ஹாங்காங்கியர்கள், சீனாவுக்கும், ஹாங்காங்கின் சீனா பொம்மை அரசுக்கும் எதிராகக் கடுமையான போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.



இந்தப் போராட்டம் இரண்டு மாதமாக நீடித்து வந்தாலும், கடந்த வாரம் வீக்கென்ட் என்ற வார இறுதிநாள் போராட்டத்தில் 17லட்சம் பேர் கலந்துகொண்டு, ஹாங்காங் விமான நிலையம். இரயில் நிலையம் என்று அனைத்தையும் முடக்கினர்.

ஹாங்காங்கியர்களின் வீரம் செறிந்த இந்தப் போராட்டம் உலகம் முழுக்க முக்கிய விவாதப் பொருளாகியிருக்கிறது.

ஹாங்காங்கின் ஆட்சி அதிகாரம் ஹாங்காங்கியர்க்கே என அம்மக்கள் சொன்னாலும், 1984இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரிட்டன் சட்ட ஆட்சி முறை இன்னும் 28ஆண்டுகள் மட்டுமே ஹாங்காங்கில் இருக்கும்.

வரலாற்றில் ஹாங்காங் ஒரு நாடு இல்லை.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் சென்னை, மும்பை, கல்கத்தா போன்ற பெருநகரங்களைத் தங்கள் வணிக நோக்கத்திற்காக உருவாக்கியது போல் சீனாவில் ஹாங்காங்கை உருவாக்கினார்கள்.

இதில் காஷ்மீர் மொகலாய மன்னர் அக்பர் ஆட்சிக்கு முன்னும், ஆங்கிலேய ஆட்சியிலும் தனிநாடாக இருந்து, சுதந்திர இந்தியாவில் ஒரு மாநிலமாக – சுயாட்சி மாநிலமாக – இருந்ததை, தந்திரத்தால் ஒரு மாநிலமாக கூட இருக்கவிடாமல்,ஒரு மாநகராட்சியை போல் இந்துத்வா ஆட்சி செய்துவிட்டது.

ஒரு நகரமான ஹாங்காங், தன்னை ஒரு நாடாக அறிவிக்கப் போராடுவதும். ஒரு தனிநாடாக இருந்த காஷ்மீர், மூன்று ஒன்றிய பிரதேசங்களாகச் சுருக்கப் பட்டதும் வரலாற்று அவலங்கள்

இந்தியா, எளிதில் காஷ்மீரைச் சிதறடித்தது போல் , சீனா ஹாங்காங்கை நசுக்க முடியாது.

உலக முதலீட்டாளர்கள் உலகளாவிய வர்த்தக நகரமாக ஹாங்காங்கை ஆக்கியுள்ளனர் தங்கள் கள்ளப்பணத்தை அல்லது வருவானவரிக் கேள்விக்கு உட்படாமல் சேமித்துப் பாதுகாத்த பணத்தை, ஹாங்காங்கில் பதுக்கி வைக்கின்றனர்.

அப்படிப்பட்ட ஹாங்காங்கை, முழுமையாகச் சீனச் சட்டத்திற்குப்பட்ட நாடாக மாற்றினால், பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் 1500க்கு மேற்பட்டவைகளின் கிளை அலுவலகங்களை வேறு நாடுகளுக்கு மாற்றும் நிலைவரும்.

ஹாங்காங்கை, சிங்கப்பூரைப் போல் தனிநாடாகப் பிரிந்துபோகச் சீனா ஒருபோதும் சம்மதிக்காது.

ஹாங்காங், சீனா விவகாரம் இந்தியா காஷ்மீர் போல உள்நாட்டுப் பிரச்சினை அன்று. அதில் அண்டை நாடுகள் தலையிடும். ஐக்கிய நாடுகள் சபையும் உள்ளே வரும்.

ஹாங்காங்கின் கட்டுப்பாடற்ற கார்ப்ரேட் வர்த்தகத்தினாலும். கட்டுப்பாடற்ற பிரிட்டன் சட்டமுறையினாலும், உலக வல்லாதிக்க நாடுகள் குரல்கள் ஹாங்காங்கிற்கு ஆதரவாக வலிமையாக ஒலிக்கும். இருநாள்களுக்கு முன்பு அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சீனாவை இவ்விடயத்தில் எச்சரிக்கும் போதே இதனை நாம் புரிந்துகொள்ளளாம்..

காஷ்மீரின் ஜனநாயகத்தை மதவாதத்தால் வீழ்த்தியது போல். ஹாங்காங் சுயாட்சி ஜனநாயகத்தை அடக்குமுறையைக் கொண்டு சீனாவால் வீழ்த்த முடியாது. உலக நாடுகள் ஒருபோதும் அதனை அனுமதிக்காது.

காஷ்மீரிலும், ஹாங்காங்கிலும் ஒடுக்கு முறைகள் ஒரே மாதிரியாக உள்ளன. ஆனால் காஷ்மீர் மக்களின் இன உரிமைக் குரலைக் காட்டிலும், ஹாங்காங்கின் பணவலிமையே உலக அரங்கில் உரத்துக் கேட்கும் என்பதுதானே எதார்த்தம்! ●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## கரூர்



கரூர் மாவட்டம் சீத்தப்பட்டியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் கொள்கை பரப்புக் கூட்டம் 18-8-2019 அன்று நடைபெற்றது. காவல்துறையின் கெடுபிடிகளை மீறி கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

## திண்டுக்கல்



திண்டுக்கல் மாவட்டம், பேரவையின் 'மாதம் ஒரு கலந்துரையாடல் கூட்டம்' 18-08-2019 அன்று தோழர் புலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எதிர்வரும் செப்டம்பர் 17ஆம் நாள் தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

## சென்னை



சென்னை, பேரவைத் தலைமை நிலையத்தில் 11-08-2019 அன்று மாதம்தோறும் நடைபெறும் இரண்டாம் ஞாயிறு கூட்டத்தில் தோழர்கள் சுப.வீரபான்டியன், பாரதி, சிலம்பரசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

# ப.சிதம்பரம் கைது...

முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஐஎன்எக்ஸ் மீடியா தொடர்பான வழக்கில் கைது செய்யபட்டுள்ளார்.

சட்டபடி கைது நடவடிக்கை நடந்துள்ளதாக மத்திய ஆளும் தரப்பினர் சொல்கிறார்கள். ஆனால் அப்படித் தெரியவில்லை.

உச்சநீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது, அவரைக் கைது செய்தது சட்டபடியா என்று தெரியவில்லை.

ஒரு 'கிரிமினலை' கைது செய்யவது போல இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சராய் இருந்த ஒருவரைக் கைது செய்ய, சி.பி.ஐ அதிகாரிகள் சுவர் ஏறிக் குதித்திருக்கிறார்கள் என்பது வேடிக்கையாக இருக்கிறது.

2010ஆம் ஆண்டு ஒரு என் கவுண்டர் வழக்கில் அமித்ஷா கைது செய்யப்பட்டார். அப்போது ப.சிதம்பரம் உள்துறை அமைச்சராக இருந்தார்.

இப்பொழுது ப.சிதம்பரம் கைது செய்யப்பட்டிருக்கிறார். உள்துறை அமைச்சராக இருப்பவர் அமித்ஷா. ஒரு வகையில் இந்த கைது நடவடிக்கை பழிவாங்கும் வகையில் இருக்கிறது.

ஊழல் குறித்து விசாரிப்பதும், கைது போன்ற நடவடிக்கைகளும் சட்டபடியானவைதான். ஆனால் அது குறித்த அணுகு முறை விவாத்திற்கு உள்ளாகிறது.

இந்தக் கைது நடவடிக்கையில் காட்டிய வேகம் அசாத்தியமானது, பதற்றமிக்கது.

இந்த மத்திய அரசு ஜனநாயகத்தை மதித்து ப.சிதம்பரத்தைக் கைது செய்ய காட்டிய அதே வேகத்தை, ஆளும் தரப்பு, ஆளும் தரப்புக்கு ஆதரவானவர்கள் மீது ஏன் காட்டவில்லை?

கர்நாடகாவின் முதலமைச்சர் எடியூரப்பா மீது ஊழல் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அவர் இதுவரை கைது செய்யபடவில்லை. மாறாக பா.ஜ.க அவரை ஒரு மாநிலத்தின் முதல்வராக்கியிருக்கிறது.

தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர் ராம்மோகன்ராவ் அலுவலகத்தில் நுழைந்து பரபரப்பை ஏற்படுத்திய சிபிஐ, பின்னர் அமைதியாகி விட்டது.

தமிழக அமைச்சர் குட்கா புகழ் விஜயபாஸ்கர் இன்னும் வெளியில்தான் இருக்கிறார்.

இவர்கள் மத்திய அரசுக்கு ஆதரவானவர்கள் என்பதனால் இவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை, அதற்கான வேகமும் இல்லை.

இந்தியாவின் பிரதமர் இது குறித்தெல்லாம் பேசமாட்டார், விளக்கம் தரவும் மாட்டார். அவர் தான் இந்தியாவில் இருப்பதில்லையே.

நாட்டைச் சீரழித்துக் கொண்டிருக்கும் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்க, அவைகளையெல்லாம் கவனிக்காமல் மக்களுக்கு எதிராக இருக்கும் மத்திய பாஜக அரசின் இந்த கைது நடவடிக்கையும், அதில் காட்டிய வேகமும், அணுகுமுறையும் மக்களை முகம் சுழிக்க வைத்து விட்டன.

# பார்ப்பனியத்தின் வளர்ச்சியும் பொருளாதார வீழ்ச்சியும்!

● மா. உதயகுமார்

*பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வரும்போதெல்லாம் மதவாதம் தலைவிரித்தாடும் என்பது உலகறிந்தது. இதனை இப்படி மேலோட்டமாகச் சொல்லாமல், நுண்ணோக்கிச் சொல்ல வேண்டும் என்றால் இசுலாமியர்களையும், பார்ப்பனரல்லாத இந்துக்களையும் பலியாக்கி பார்ப்பனியம் தலைவிரித்தாடும். இது எல்லோரும் அறிந்த உண்மை.*

*பார்ப்பனியத்தின் கை எப்போதுமே சமூகத்தில் ஓங்கித்தானிருக்கிறது. ஆனால் வரலாறு காணாத அளவிற்கு இப்போது அது பன்மடங்கு அதிகாரம் பெற்று வீற்றிருக்கிறது. பொருளாதாரம் வரலாறு காணாத அளவிற்கு வீழ்ச்சியுற்றிருக்கிறது.*

*இதனைச் சித்தாந்த ரீதியில் அனுகினால் பார்ப்பனர்களின் பேதம் கற்பிக்கும் கொள்கையானது, அறம் சாராதது மட்டுமன்று, பொருள் சாராததும் ஆகும் என்பதற்குத் தெளிவான சான்றாக இந்தப் பொருளாதார வீழ்ச்சி அமைகிறது. அறமும் பொருளும் இல்லாத இடத்தில் இன்பம் எங்ஙனம் கிடைக்கப்பெறும்?*

*அறம், பொருள், இன்பத்தை நம்முடைய திருக்குறள்தான் தரமுடியுமே தவிர, ஆரியர்களின் (சனாதன)தர்ம, அர்த்த, காம, மோட்ச சாஸ்திரங்களின் படி நடக்கும் ஆட்சியாளர்களால் தரவே முடியாது. இந்த ஆரிய சித்தாந்தம் பார்ப்பனர்கள் அல்லாத ஆரியர்களுக்கே அநீதி விளைவிக்கக் கூடியதுதான். எனவே தீவிரவாதத்தை விட தீவிரமாக ஒழிக்கப்பட வேண்டியது பார்ப்பனர்களின் சித்தாந்தமே.*

*இந்த நாடு வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருப்பவர் பா.ஜ.க உருவாக்கிய நிதி ஆயோக்கின் துணைத் தலைவர் இராஜீவ் குமார் ஆவார். ஆட்டோமொபைல் துறை, ஜவுளித் துறை, உற்பத்தித் துறை, உணவுத் துறை எனத் துறைகள் தோறும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அரசோ ப.சிதம்பரத்தைக் கைது செய்ய ஏற்பாடு செய்கிறது. சுவர் ஏறிக் குதித்துக் கைது செய்யும் சுவாரஸ்யமான காட்சிகளைக் காட்டி எத்தனை நாள்களைக் கடத்த முடியும்?*

*நோய்நாடி நோய்முதல் நாடிப் பார்த்தால் அது நவம்பர் 8, 2016 இரவு 8 மணிக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. பணமதிப்பிழப்பு என்னும் பயங்கரவாதம் இந்த நாட்டு மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது. ஆனால் அதனை வீரதீரச் செயலாக இந்த நாட்டு மக்களைப் பார்ப்பனியம் நம்ப வைத்தது. அவர்கள் தேடிப் பிடித்துக் கொண்டு வந்த ரிசர்வ் வங்கியின் ஆளுநர் உர்ஜித் பட்டேல், பதவியை இராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து GST. தொழில்துறைகள் கொஞ்சம் கொஞ்சமாக முடங்கின. இன்று அதன் விளைவுகள் எரிமலை போல் வெடித்துக் கொண்டிருக்கின்றன. பல ஆயிரம் பேருக்கு வேலைகள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. இனி பக்கோடா போட்டாலும் அதை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை.*



*பார்ப்பனியம் இப்போது அமைதியாக இருக்கிறது. தனக்கு மட்டும்தான் அறிவு இருக்கிறது என்று எல்லாவற்றையும் செய்துவிட்டு, பின்னர் மோசமான விளைவுகளைச் சந்திக்கும் போது பார்ப்பனர்கள் அமைதி காப்பதைத் தான் அம்பேத்கர் 'conspiracy of silence' என்று சொன்னார்.*

*நாடு தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த நிலையில்தான், ஒரு அறிவு ஜீவி பாரம்பரியமான முறையில் இடைக்கால பட்ஜெட்டைத் தாக்கல் செய்தார். பொருளாதார வல்லுநர்கள் எதிர்க்கேள்விகளைத் தாக்கல் செய்தனர். அவர்கள் அத்தனை பேரையும் நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என்று முத்திரை குத்தினார்கள். பட்ஜெட் ஆவணங்களை மேற்கத்திய பாணியில் சூட்கேஸில் கொண்டு வரும் வழக்கத்தை மாற்றி, பாரம்பரியப் பையில் கொண்டு வந்தால் நாடு வளர்ச்சியடைந்துவிடும் என்று மக்களை நம்ப வைத்தார்கள். தகுதியும் திறமையும் கொண்ட "உயர்ஜாதி" அமைச்சர்களைக் கொண்டு காட்டுக்குள் துணிச்சலாகச் செல்லும் பிரதமரின் ஆட்சியில் பொருளாதாரம் மட்டும் பலவீனம் அடைந்திருக்கிறது.*

*பாகிஸ்தானைக் காட்டியே இந்த நாட்டு மக்களின் கண்களைக் கட்டுகின்றனர். பாகிஸ்தான் என்ற நாடு மட்டும் இல்லையென்றால் பா.ஜ.கவிற்கு வாழ்க்கையே கிடையாது. சொல்லப்போனால் பாகிஸ்தானால் இவர்கள் தான் வாழ்க்கை பெற்றிருக்கிறார்கள்.*

*தற்போது ஒட்டு மொத்த நாடே பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. பல நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. ஆனால் ஒருவரின் சொத்து மதிப்பு மட்டும் ஒரே நாளில் ரூ.29,000 கோடி அதிகரித்தது. ஜியோ நிறுவனம் மற்ற தொலைத் தொடர்பு நிறுவனங்களைத் தின்று வளர்ந்து வருகிறது. அம்பானியும் அதானியும் நாட்டைப் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில் பார்ப்பனியம் தன்னுடைய பங்கைச் சரியாகப் பெற்றுக் கொள்கிறது.*

*நவீனப் பொருளாதாரக் கொள்கைகள் பெரும்பாலும் அறம் சாராதவை. அவை முதலாளித்துவம் சார்ந்தவை. அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் பெரிதொரு மாற்றத்தைக் கொண்டு வராதவை. ஆனால் இந்தப் பொருளாதாரமே சரிகிறதென்றால் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை எவ்வளவுதூரம் பின்னுக்குப் போகப்போகிறது என்பது புலப்படுகிறது.*

*மீண்டும் சாணக்கியர்களை தலை தூக்கவிட்டால், நாம் நிலை தாழ்ந்து போவோம் என்பதை மக்கள் உணர வேண்டும்.* ●

Published By General secretary , Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian,